Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 41/2024 PW-1**

Name : மஞ்சுளா
Father / Husband name : மணிமாறன்
Village : சாரம்
Age : 49
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 15.09.2025

A1, A2 present. APP present.

<u>முதல் விசாரணை</u>

நான் வீட்டில் டைலரிங் செய்துவருகிறேன். சாட்சிகள் பார்த்திபன், பொன்னுசாமி ஆகியோர்களை எனக்கு தெரியும். சத்தியா எனது மகள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் முன்விரோதத்தின் காரணமாக அடிக்கடி எங்களிடத்தில் பிரச்சனை செய்துவந்தார். கடந்த 03.03.2024 அன்று இரவு 9 மணியளவில் எங்கள் வீட்டின் பக்கத்திலிருக்கும் நாடார் கடைக்கு எனது மகள் சத்தியா சென்றிருந்தார். நான் எனது மகளின் சத்தம் கேட்டு வெளியில் சென்று பார்த்தபோது 1வது எதிரி எனது மகளின் கையை பிடித்து இழுத்து ரகளை செய்துகொண்டிருந்தார். நான் சென்று கேட்டபோது 1வது எதிரி ஏன்டி தேவிடியா, உனக்கு ஆம்பள பிள்ளை வேணும்னா என்னுடன் வந்து படு என்று அசிங்கமாக பேசி என்னை கீழே தள்ளி கையாலும், காலாலும் எனது மார்பிலும், உயிர்நாடியிலும் அடித்தார். கட்டையாலும் அடித்தார். பின்னர் எதிரிகள் இரண்டுபேரும் வாடி தெவிடியா வெளியில் வாடி உன்னை மண்ணெண்ணய் ஊற்றி கொளுத்திவிடுவேன் என்று மிரட்டியும், உனது மகளை லாரி ஏற்றி கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார். நான் பயந்துகொண்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். எனதுகணவர் வந்தவுடன் இரவு 10 மணியளவில் திண்டிவனம் அரசு மருததுவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டேன். அதன்பின்னர் நான் ஒலக்கூர் காவல் நிலையம் சென்று சம்பவம் குறித்து புகார் கொடுத்தேன்.

தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **சாட்சியின் கையொப்பத்துடன் கூடிய அசல் புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

Sd/ M.Elavarasi,
Judicial Magistrate No.1, Tindivanam